# கோவிட்–19 /COVID-19

வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான புதிய செய்தி

Toronto Community Housing

மார்ச்சு **23, 2020**

## உங்களுக்கு உதவி வேண்டும் என்றால் உதவ இங்கு நாம் இருக்கிறோம்.

**ஒரு நாளின் எந்த நேரம் என்றாலும் எமது சேவைபெறுநர் பராமரிப்பு முகவர் ஒருவருடன் கதைப்பதற்கு அழையுங்கள் தொலைபேசி எண் 416-981-5500, அல்லது மின்னஞ்சல் அனுப்புங்கள் [help@torontohousing.ca](mailto:help@torontohousing.ca)**

கோவிட்-19/ COVID-19 அவசரகால நிலைமையின் பொழுது, எமது பணியாளர்கள் எமது கட்டிடங்கள் மற்றும் காரியாலயங்களில் பணிபுரிந்து கொண்டு, அத்தியாவசியமான சேவைகளை வழங்கி வருகின்றனர்.

சேவையில் 24 -7 மணி நேரம் என்ற முறையில் ஈடுபட்டு உள்ள எமது சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்தை, இச்சமயங்களில் அழையுங்கள் :

- உங்களை நீங்களே சுய தனிமைப்படுத்தும் ஒருவராக இருந்து கொண்டு, உணவு மற்றும் மருந்து போன்ற அன்றாட வாழ்வுத் தேவைகளைப் பெறுவதில் உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது.
- திருத்த வேலைகள் தேவைப்படுகின்றன. அவசரகால நிலைமைத் தேவைகளை நாம் உடன் செய்கிறோம். அவசரகால நிலைமை இல்லாத திருத்த வேலைகள் பின்னர் ஒரு திகதிக்கு என்று ஏற்பாடு செய்யப்படும்.
- வருபவர்கள் முன்னேற்பாடு இல்லாமல் உள்வருவதற்கு எமது காரியாலயங்கள் மூடப்பட்டு உள்ள நிலையில், பணியாளர்களை நேரில் காணுவதற்கு ஒரு சந்திப்பு ஏற்பாட்டினை ஒழுங்கு செய்ய வேண்டி உள்ளது.

ஆரோக்கிய இயல்பில் பலவீனங்கள் கொண்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டு உள்ள வாடகைக் குடியிருப்பாளர்களை எமது பணியாளர்கள் தொலைபேசியில் அழைத்து, அவர்களுக்கு எவ்விதமான ஆதார உதவிகள் வேண்டுமென்று கேட்டு வருகின்றனர்.

எமது சமூக பாதுகாப்புப் பிரிவு, சேவையில் 24 -7 மணி நேரம் என்ற முறையில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு எப்போதும் போல நீங்கள் **416-921-2323** தொலைபேசி எண்ணில் அழைக்க முடியும்.

**மேலதிக தகவல் பெறுவதற்கு இங்கு சென்று பாருங்கள்:** [torontohousing.ca/coronavirus](https://torontohousing.ca/coronavirus)

**நீங்கள் கோவிட்-19** /COVID-19 **தொடர்பிலான எமது புதிய செய்திகளை மின்னஞ்சல் வழியாகப் பெற விரும்புகிறீர்களா?**
**மின்னஞ்சல் ஒன்று help@torontohousing.ca என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.**
**உங்கள் மின்னஞ்சலில்** Sign Me Up **என்ற செய்தியைக் குறிப்பிடுங்கள்.**

இந்த அறிவித்தலை வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் பெறுவதற்கு அழையுங்கள் :
**416-981-5500**